# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண். 144/2001**

பெயர்: **சின்னதம்பி** நாள்: 06.03.2026

பி.வா.சா.1 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – சின்னதம்பி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம்:-</u>11:35

இந்த வழக்கின் வாதி, நான் மற்றும் 7-ம் பிரதிவாதி சின்னத்தாயி ஆகியோர் உடன்பிறந்தவர்கள் என்றால், சரிதான். 5, 6 பிரதிவாதிகளாகிய முருகேசன் மற்றும் பழனிசாமி வாதியின் முதல் மனைவியின் வாரிசுகள் என்றால், சரிதான். வாதிக்கு 2 மனைவிகள் அதில் முதல் மனைவி பழனியம்மாள் மற்றும் 2-ம் மனைவி கந்தாயி என்றால், கந்தாயியை இடையில் அழைத்து வந்து வாழ்ந்து வந்தார். முதல் மனைவி பழனியம்மாள் வாதியுடன் வாழவில்லை என்றால், கொஞ்ச காலம் தான் வாழ்ந்தார்கள் அதன்பின்னிட்டு சேர்ந்து வாழவில்லை. வாதி அவருடைய முதல் மனைவியை அவருடைய சாதி வழக்கப்படி விவாகரத்து செய்தார் என்றால், இல்லை. எங்கள் சாதியில் துரும்பருத்தல் பழக்கம் உள்ளதா என்றால், உள்ளது. வாதிக்கும் 2-ம் மனைவி கந்தாயிக்கும் ஜவஹர் என்ற மகன் உள்ளார் என்றால், உள்ளார் ஆனால் எங்கே இருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அனைவரும் எங்களுடைய சொத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதி தகாத முறையில் சென்றதால் தான் அவருக்கு சொத்து இல்லை என்றால், ஆமாம் அவருக்கும் இல்லை எனக்கும் இல்லை. எனக்கு சொத்து இல்லை என்றும் எதற்காக நான் வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், வழக்கில் நான் தரப்பினர் என்பதால் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு 2 மகன்கள் அவர்கள் இந்த வழக்கில் 15 மற்றும் 16-ம் பிரதிவாதிகள் ஆவார். 3-ம் பிரதிவாதி சின்னமுத்து என்பவர் தாவா சொத்து சம்மந்தமாக கிரைய ஒப்பந்தம் போட்டு கொண்டாரா என்றால், ஆமாம். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3-ம் பிரதிவாதி இறந்து விட்டார் என்றால், சரிதான். அவருடைய வாரிசுகள் தான் இந்த வழக்கில் 8 முதல் 14 பிரதிவாதிகள் என்றால், சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த போது 4-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியான அரசிராமணி பிட்-2

கிராமத்திலுள்ள 34 சென்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்தேனா என்றால், சரிதான். எந்த ஆண்டு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால், எனக்கு ஞாபகமில்லை. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்தும் சட்டத்திற்கு முரணாக நடைமுறை விதிகளை மீறி 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால், இந்த வழக்கின் வாதி 62 செண்ட் நிலத்தை விற்றதால் நானும் 34 செண்ட் நிலத்தை விற்றேன். வாதி விற்றதாக சொல்லக்கூடிய 62 செண்ட் நிலம் தாவா சொத்தில் இல்லை என்றால், சரிதான். வாதி விற்றதாக சொல்லக்கூடிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எந்த வருடத்தில் வாதி நிலத்தை விற்றார் என்றால், எனக்கு ஞாபகமில்லை. வாதி விற்றதாக சொல்லக்கூடிய 62 செண்ட் நிலத்தை நான் மற்றும் என்னுடைய குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து கையொப்பம் செய்தோம் என்றால், சரிதான். வாதி விற்றதால் நானும் விற்றேன் என்று சொல்வது ஒப்புக்கானது என்றால், சரியல்ல. வாதி விற்ற சொத்து வாதியுடையது அல்ல என்றும் அது எங்களுடைய குடும்ப சொத்து என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக வாதியின் சொத்து என்று கூறுவது தவறு என்றால், சரியல்ல. வாதி விற்றதாக சொல்லக்கூடிய சொத்து அவருடையது என்று நீரூபிக்க இந்நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. இந்த வழக்கில் 2 கிராமத்தில் உள்ள சொத்துக்களை வழக்கு சொத்தாக காண்பித்து உள்ளார் என்றால், சரிதான். அரசிராமணி பிட் -1 கிராமத்தில் உள்ள சொத்து அதிகளவிலும், அரசிராமணி பிட்-2 கிராமத்திலுள்ள உள்ள சொத்து குறைவான அளவிலும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அரசிராமணி பிட்-1 கிராமத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து 2 தார்சாலைகளுக்கு இடையில் உள்ளது என்றால், சரிதான். ஒரு தார்சாலை கல்வடங்கம் போகும் ரோடு, மற்றொன்று வெள்ளாளப்பட்டி மாரியம்மன் கோவில் போகும் தார்சாலை வடபுறமாக உள்ளது. கல்வடங்கம் போகும் ரோட்டில் ஓரமாக வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால், சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த மாரிமுத்து என்பவர் வெள்ளாளப்பட்டி மாரியம்மன் கோவில் போகும் தார்சாலையை ஓட்டி குடியிருந்து வருகிறாரா என்றால், ஆமாம். சாட்சி பின்னிட்டு அவர் எங்கு உள்ளார் என்று தெரியாது என்று சொல்கிறார். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதிக்கு விபத்து ஏற்பட்டதா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு விபத்து ஏற்பட்டு அவர் படுத்த படுக்கையில் உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரிந்தும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதி தாவா சொத்தை பிரித்து அவருக்கு உண்டான பாகத்தை ஒதுக்கும்படி பரிகாரம் கோரியுள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. வாதி இந்த வழக்கில் வேறு என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் விவரங்களை தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம்:</u> 12.10

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.03.06 13:01:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.